வர மறுப்பார்களேயானால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதோடு மட்டுமின்றி அங்கு காவல் துறையினர் மூலமாக இவற்றை ஒழுங்கு படுத்தி கண்டிப்பாக நடை முறைப்படுத்த வேண்டும் என்ற உத்தரவும் இடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் இருக்கின்ற டாக்சிகளுக்கு அதிகமாகக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, டாக்சிகள் பெட்ரோலில் ஓடுவதற்குப் பதிலாக டீசலில் ஓடுவதற்கு ஏதுவாக மாற்றுவதற்கு அரசு கடனுதவி அளித்தால் பல டாக்சிகள் டீசலில் ஓடுவதாக ஆக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படி அனைவருக்கும் தர முடியவில்லை என்று சொன்னாலும் கூட்டுறவுத் துறையில் ஓடும் டாக்சிகளுக்காவது இந்த மாதிரி டீசலில் ஓடுமாறு மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு டீசல் என்ஜின் விலை 18 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இதிலே பல சிரமங்கள் இருக்கும் காரணத்தால் நடைமுறைப்படுத்துவதில் சிரமம் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கூட்டுறவுத் துறையின் மூலம் தனியாக இயங்கும் டாக்சி என்று இல்லை. கடனைக் கட்டும் வரைதான் அது கூட்டுறவு சொஸைட்டிகள் என்று சொல்லப்படுகிறது. கடன் கொடுத்து முடிக்கப்பட்ட பிறகு தனித்து இயங்குகிறார்கள். எனவே இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள்.

*வினா 457— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆட்டோ ரிக்ஷாக்களில் தவறான முறையில் மீட்டரைப் பொருத்தி முறைகேடு செய்வதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) மீட்டர்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் முத்திரை இருக்கும். இந்த முத்திரயையை ஏதாவது ஒரு விதத்தில் ஒருவர் உடைத்தாலோ அல்லது கிழித்தாலோ அவர் விதிகளை மீறியுள்ளதாகக் கருதப்படுகிறது. போக்குவரத்துத் துறையின் நேரிடப் பணியாளர்கள் திடீரென்றும், அடிக்கடியும் சோதனைகளை நடத்தி வருகின்றனர். 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை உள்ள கால அளவில், மீட்டர்களில் உள்ள முத்திரைகளை உடைத்தது குறித்தும், பயணிகளிடமிருந்து கூடுதல் கட்டணங்களை வசூலித்ததற்காகவும் 110 உரிமதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு சற்றுத் தொடர்பு இல்லை என்றாலும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்குவதன் காரணமாக மாயூரம், கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் இதற்கு முன்னால் இத்தகைய வாகனத் தொழில் புரிந்து வந்த குதிரை வண்டிக்காரர்களும், மாட்டு வண்டிக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து அடிக்கடி அரசுக்கு அவர்கள் மனுக்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆட்டோ ரிக்ஷா போன்றவற்றுக்கு உரிமம் வழங்கும்போது மாட்டு வண்டி, குதிரை வண்டிக்காரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உரிமம் வழங்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்த நல்ல யோசனை பரிசீலிக்கப்படும்.

கோவை அருகே மாற்றுப் பாதை.

* வினா 458— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரத்தின் வழியாகக் கேரளாவிற்குச் செல்லும் வாகனங்களின் மூலம் ஏற்படும் நெரிசலைக் குறைக்க தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் கோவைக்கு அருகில் பைபாஸ் ரோடு அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?